Translated From English to Tamil
By Smt Kanthalakshmi Chandramouli

கட்டுரை



பல சமயங்களில் நான் எங்கள் வீட்டு பூஜையறையில் விளக்கேற்றுகையில் "நான் கொடுத்து வைத்தவள், நன்றி இறைவனே" என்று எண்ணிக் கொள்வதுண்டு.

அதற்கு காரணம் எங்கள் வீட்டு தெய்வமான 'ராதா - கிருஷ்ணர்' சிலைதான்.

ஜெய்ப்பூர் மார்பிள் கற்களில் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்ட இவர்கள் இருவரையும், பல வருடங்கள் முன்பு என் மாமியார் திருமதி ராஜலக்ஷ்மி சேதுராமன் அவர்கள் மும்பை மாதுங்காவில் உள்ள எங்கள் இல்லத்திற்கு எடுத்து வந்தார்.

1963 ஆண்டு எங்கள் வீட்டிற்கு வந்த இவர்கள் இருவரையும் என் மாமியார் குடும்ப உறுப்பினராகவே மாற்றிவிட்டார். மிக சிறந்த கிருஷ்ண பக்தையான என் மாமியார் அன்றிலிருந்து ஒவ்வொரு புதன் கிழமையன்று பஜனை செய்வார்.

# எங்க வீட்டு தெய்வம்



LADIES SPECIAL DEEPAVALI MALAR - 2013

அது போக செளந்தர்ய லஹரி, அபிராமி அந்தாதி, பஜகோவிந்தம் மற்றும் பல்வேறு பக்திபாடல்கள் என்று தொடர்ந்து, சல்லிகாசு கூட வாங்காமல் கற்றுத் தருவார்.

என் மாமனார் திரு சேதுராமன் என் மாமியாரின் அனைத்து ஆன்மீக பணிகளுக்கும் உறுதுணையாக நிற்பார்.

ராதா கல்யாணம் மற்றும் கிருஷ்ணஜெயந்தி இரண்டையும் மிகப்பெரிய அளவில் மிக சிறப்பாக செய்வார்.

> **எங்கள் வீட்டு கிருஷ்ணர்தான். 'கிட்டா' எனும் செல்லப் பெயருடன் பாட்டு அறையை ஆக்கிரமித்துக் கொள்வார். அதனால் எங்கள் வீட்டு பாட்டு அறை 'கிட்டா அறை' என்று அழைக்கப்பட்டது.**

என் பெற்றோர் பாமா மற்றும் பாலக்ருஷ்ணன் இருவரும் என்னை சீராட்டி, பாராட்டி வளர்த்தவர்கள். ஆன்மீகம், பாட்டு, இறை தியானம் இவையெல்லாம் அவர்களுடைய வளர்ப்பில் முக்கிய பங்கு வகுத்தது.

என் பெற்றோர்கள் இருவருக்குமே கர்நாடக சங்கீதத்தில் தீவிர ஆர்வம் இருந்தது. என் தந்தை சமஸ்க்ருதத்தில் தேர்ச்சி பெற்றவர், மற்றும் கலை விமர்சகராகவும் இருந்தார்.

என் திருமணம், என் கணவர் திரு ராஜாவுடன் என் பதினெட்டாவது வயதில் 1973ம் ஆண்டு நடைபெற்றது.

நான் குடியிருக்கும் கோயிலாக மாறிய என் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கும் பொழுது அங்கு நான் பார்த்தது சங்கீதமும், பக்தியும்தான்!

என் மாமியாரிடம் நான் முதன் முதலாக கற்றது (சமையலைத்தவிர) எங்கள் வீட்டு கிருஷ்ணரை காலையில் எழுப்பும் பௌளி ராகத்தில் அமைந்த சுப்ரபாதம்.

"ஜாகோ பன்ஸி வாரே லலனா,
ஜாகோ மோரே பியாரே"

(புல்லாங்குழல் ஊதும் சிறுவனே எழுந்திராய் எழுந்திராய் என் அன்புக்குரியவனே)

நான், என் மாமியார், என் நாத்தனார் அனைவரும் இணைந்து இப்பாடலை பாடுகையில் வீடே மதுரா நகராக மாறிவிடும்.

வீட்டில் நடக்கும் பஜனைகளில், பஜனை சம்ப்ரதாய பாடல்கள், ஊத்துக்காடு பாடல்கள், நாராயண தீர்த்தர் தரங்கம், மீரா பஜன் (என்று கூறிக் கொண்டே போகலாம்) என்று அனைத்தும் இடம் பெறும்.

வீடு கொள்ளா பெண்கள், பட்டுப்புடவையும், மல்லிகைப் பூவுமாக வளைய வந்து, பஜனைப் பாடல்களை பாடும் பொழுது பக்தியும், சங்கீதமும் விண்ணையெட்டும்.

அவர்கள் பாடும் பாடல்களை கேட்கும் பொழுது அது ஒரு பக்திபூர்வமான, ஆன்மீக அனுபவமாக இருந்தது.

தன்னுடைய 52வது வயதில், 1977ம் ஆண்டு பிப்ரவரி மாதம், அடுத்து வரப்போகும் ராதா கல்யாணத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு, திடீரென்று என் மாமியார் இறைவனடி சேர்ந்து விட்ட பொழுது எங்களோடு இணைந்து எங்கள் வீட்டு கிருஷ்ணரும், ராதையும் கண்ணீர் விட்டனர் என்று கூறினால் அது மிகையாகாது.

ஆம், வரப்போகும் ராதா கல்யாணத்திற்கு ராதையும், கிருஷ்ணரையும் முழுமையாக அலங்கரித்து வைத்து இருந்தார் என் மாமியார் ராஜலக்ஷ்மி.

என் நினைவுகளை பின்னோக்கி செலுத்துகையில் எங்கள் பம்பாய் (இன்றைய மும்பை) மாதுங்கா வாழ்க்கை பசுமையான நினைவுகளை அள்ளி வீசுகின்றது.

**உரையாடல்: கர்நாடக இசை கலைஞர் கலைமாமணி கீதா ராஜா**

தொகுப்பு: அமிர்தவல்லி. (காந்தலக்ஷ்மி சந்திரமௌலி)



Deepavali Malar - 2013

"என் பையன் பண்ண காரியத்துனால என்னால வெளியே தலை காட்ட முடியலை.."

"அப்படி என்ன பண்ணிட்டான்..?"

"என்னோட விக்கை எடுத்து அவன் போட்டுக்கிட்டுப் போய்ட்டான்."



பம்பாய் வாழ்க்கையின் வேகமும், பரபரப்பும் எப்படி புகழ் பெற்றதோ அது போன்ற பம்பாய் நகர குட்டி ஃபிளாட் வீடுகள் மிகவும் புகழ் பெற்றவையாகும்.

ஒரு ஹால், ஒரு சமையலறை ஒரு பாட்டு அறை இதுதான் எங்கள் மாதுங்கா வீடு. இதில் எங்கள் அனைவரோடு இணைந்து எங்கள் 'கிட்டாவும்' வசிப்பார்.

ஆம், எங்கள் வீட்டு கிருஷ்ணர்தான். 'கிட்டா' எனும் செல்லப் பெயருடன் பாட்டு அறையை ஆக்கிரமித்துக் கொள்வார். அதனால் எங்கள் வீட்டு பாட்டு அறை 'கிட்டா அறை' என்று அழைக்கப்பட்டது.

என் நாத்தனார் குடும்பமும் 'கிட்டாவை' பார்த்து பேச அடிக்கடி வருவதுண்டு.

அது சரி, 'யார் உங்கள் நாத்தனார்' என்று நீங்கள் கேட்பதற்கு முன்னர் நான் கூறிவிடுகிறேன். அவர்தான் **பத்மஸ்ரீ அருணா சாய்ராம்!**

அவர் விளையாடிய கிட்டாவுடன் அவருடைய இரு மகள்களும், என் இரு மகள்களும் இணைந்து அதே 'கிட்டா'வுடன் அனைத்தையும் பகிர்ந்து கொள்வது மறக்க முடியாத நினைவுகள்!

யாருக்கு எந்த பரிசு பள்ளி அல்லது கல்லூரியில் கிடைத்தால் போதும், உடனே அப்பரிசை கிட்டாவின் காலடியில் வைத்து விட வேண்டும் என்பது என் மாமியாரின் அன்பு கட்டளை.

வீடு முழுவதும் ஸ்ரீ கிருஷ்ணரின் சாராம்ஸம் நிரம்பிய நாட்கள்!

எங்கள் வீட்டிற்கு வந்த சங்கீத சிரோன்மணிகளின் கணக்கு எடுக்க இயலாது.

பிருந்தாம்மா, செம்மங்குடி, கே.வி.என். வோலட்டி, ஹிந்துஸ்தானி பாடகர் அமீர்கான் நாட்டிய தாரகை பால சரஸ்வதியம்மா, ஆன்மீக குருக்களான சுவாமி ஹரிதாஸ் கிரி, ஸ்ரீ க்ருஷ்ண பிரேமி சுவாமிகள், நீடாமங்கலப் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் போன்றவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து 'கிட்டாரூமில்' பாடியுள்ளார்கள்

அப்படிப்பட்ட சாந்நித்தியம் நிறைந்த வீடு மற்றும் கிட்டா அறையில் நானும் ஒரு பங்கா இருந்தது என் பாக்கியம்!

இந்த கிட்டாவின் குட்டி அறையில் தான் நாங்கள் சாப்பிடுவது, குழந்தைகள் விளையாடுவது, படிப்பது என்று எல்லாம் நடக்கும்.

அனைத்தும் ராதாகிருஷ்ணனரின் பார்வையிலேயே செய்தாக வேண்டும் என்பதால் விளையாட்டாக இருந்தாலும் அதில் தர்மம் தழைத்தோங்கும். புன்னகை தவழு கிருஷ்ணர் தான் ஆனால் சக்ராயுதத்தை எடுத் விஸ்வரூப தரிசனம் அளிப்பவர் அல்லவா!

ராதா கிருஷ்ணரின் அலங்காரத்தை பற் கூற வார்த்தைகளேயில்லை. அழகா நகைகளும், பட்டு பிதாம்பரமுமாக அலங்கா கிருஷ்ணராகத்தான் இருப்பார் எங்கள் வீட் 'கிட்டா'!

கிருஷ்ண ஜெயந்தி அன்று அவருக்கா வெவ்வேறு விதமான பழங்கள், தின்பண்டங்கள் பட்சணங்கள் என்று விதவிதமான மாலைகளுட கிருஷ்ணர் ஜொலிப்பார்.

'கோவிந்தா ஆலாரே' எனும் பாடலு உறியடியும் பம்பாய் முழுவதும் ஓங்கி ஒலிக் அது எங்கள் வீட்டிலும் எதிரொலித்து பக்தியு மகிழ்ச்சியும், பாட்டும், பஜனையுமாக எங்க வீடு சாந்நித்தியம் பெற்று விடும்.



Deepavali Malar 2013

உடனே
வைத்து விட
ன் அன்பு
சாராம்ஸம்
சங்கீத
இயலாது.
க.வி.என்.,
அமீர்கான்,
, ஆன்மீக
கிரி, ஸ்ரீ
மங்கலம்
ள் எங்கள்
ள்ளார்கள்.
ந்த வீடு,
ந பங்காக
முறையில்
ழந்தைகள்
எல்லாம்
ணனரின்
வேண்டும்
லும் அதில்
க தவழும்
தை எடுத்து
ல்லவா!
தை பற்றி
அழகான
அலங்கார
கள் வீட்டு
வருக்காக
ண்டங்கள்,
லைகளுடன்
பாடலும்,
கி ஒலிக்க,
பக்தியும்,
க எங்கள்



எம் படத்துல நடிக்க இத்தனை யோசனையா? வாழப்பழ ஜோக்கெல்லாம் வைக்க மாட்டேன். நல்ல யூத் சப்ஜெக்ட்தாம்ப்பா!

படம்: யோகா கமெண்ட்: ஜ்வாலா

அன்று எங்கள் வீட்டு குழந்தைகள் மட்டுமல்ல, சுற்றுவட்டாரத்து குழந்தைகளும் ராதா கிருஷ்ணர் மயில் பீலி வேடத்தில் எங்கள் வீட்டு கிருஷ்ணர்களாக மாற அவர்களுக்கு கிருஷ்ண லீலா நாடகம் காரணம் என்றால், கிருஷ்ணலீலையை நாடகபாணியில் தமிழில் தொகுத்து கிட்டாவின் எதிரில் நடத்திய பெருமை எங்கள் குடும்பத்திற்கு உண்டு. அனுகரணப் பெருமையும் கூடவே கிருஷ்ண பஜனைப் பாடல்களும் தொடர்ந்து கற்றுத்தரப்படும்.

எங்கள் குடும்பத்து உறவினரான திருமதி வைஜெயந்தி மௌலி சங்கர் அவர்கள் புகழ்பெற்ற சங்கு சுப்பிரமணியன் குடும்பத்தைச் சார்ந்தவர். இக்குடும்பம் நாமசங்கீர்த்தன பாராயணத்தை தன் உயிர் மூச்சாக கொண்டுள்ள பாரம்பரிய மிக்க குடும்பமாகும்.

திருமதி வைஜெயந்தியிடம் கற்றுக் கொண்ட பாடல்கள், பஜனை சம்பிரதாயங்கள் என்று அனைத்தும் ரத்தின கற்களாக எங்கள் வீட்டு கிட்டாவிற்கு இன்றும் சமர்ப்பிக்கின்றோம்.

எங்கள் வீட்டு, கிட்டாவும், ராதையும் எங்கள் வீட்டு குல தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் நின்று எங்களை காத்து வருகிறார் என்பதில் சந்தேகமேயில்லை.

மும்பையை விட்டு சென்னை வரும் பொழுது எங்களோடு இணைந்து எங்கள் கிட்டாவும் வந்துவிட்டார்.

இன்று எங்கள் வீட்டு ஹாலில் 'ஜம்' என்று அலங்கார கிருஷ்ணனாக ராதையுடன் என் வீட்டையே 'கிட்டா வீடாக' மாற்றிவிட்டார் எங்கள் வீட்டு கிருஷ்ணர்.

இன்றும் காலையில் எழுந்தவுடன், எங்கள் வீட்டு, கிட்டாவும், ராதையும் எங்கள் வீட்டு குல தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் நின்று எங்களை காத்து வருகிறார் என்பதில் சந்தேகமேயில்லை.

கிட்டாவின் புன்னகையும், அபய ஹஸ்தமும் எங்கள் குடும்பத்தாரை மட்டுமல்ல இந்த உலகையும் என்றென்றும் காத்து ரக்ஷிப்பார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

'சர்வே ஜனா ஹா சுகினோ பவந்து'

என் கிருஷ்ணரும் ராதையும் என் வாழ்க்கை பயணத்தில் என்னுடனே வருவது எனக்கு கிடைத்த பெரும் நிம்மதி சொத்து!

ராதா கிருஷ்ணா!



Deepavali Malar - 2013